இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

சகோதரர் சகோதரிகளே,
நம்மிடையே எவரும் தமக்கென்று வாழ்வதில்லை; தமக்கென்று இறப்பதுமில்லை. வாழ்ந்தாலும் நாம் ஆண்டவருக்கென்றே வாழ்கிறோம்; இறந்தாலும் ஆண்டவருக்கென்றே இறக்கிறோம். ஆகவே, வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்களாய் இருக்கிறோம். ஏனெனில், இறந்தோர்மீதும் வாழ்வோர்மீதும் ஆட்சி செலுத்தவே கிறிஸ்து இறந்தும் வாழ்கிறார்.
(உரோ 14: 7-9

# திருப்பயணத்தின் வழி இறையருளைப் பெற்றுள்ளது மங்கோலியா

வத்திக்கன்: திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் மங்கோலியா நாட்டிற்கான திருப்பயணம், அங்கு சிறிய அளவில் வாழும் கத்தோலிக்கர்களுக்கானது எனினும், அதன் வழியாக அந்த நாடு முழுவதும் இறையருளைப் பெற்றுள்ளது எனக் கூறினார் மத்திய ஆசியாவிற்கான ஆயர் பேரவைத் தலைவர், ஆயர் José Luis Mumbiela Sierra.



திருத்தந்தை பிரான்சிஸ் மல்கோலியாவின முன்னாள் தலைவருடன்

மங்கோலிய நாட்டிற்கான திருத்தந்தையின் பயணத்தின் விளைவுகள் குறித்து வத்திக்கான் செய்திகளுக்கு தன் கருத்துக் களைப் பகிர்ந்துகொண்ட காசாகிஸ்தானின் Almaty ஆயர் Mumbiela Sierra அவர்கள், மங்கோலியாவில் குடிமக்கள் சமூகத்துடனும், மதக்குழுக்களுடனும், கத்தோலிக்கர்களுடனும், கத்தோலிக் கரல்லாதவர்களுடனும் என பல்வேறு சந்திப்புக்களை திருத்தந்தை மேற்கொண்டது ஓர் அடையாளமாக இருந்தது என்றார்.

ஒவ்வொரு சந்திப்பும் வித்தியாசமான நோக்கங்களைக் கொண்டதாக, அவை களுக்கேயுரிய சிறப்பு அருளைக் கொண்டதாக உரைத்த மத்திய கிழக்கு ஆசியாவின் ஆயர் பேரவைத் தலைவர், 2022ஆம் ஆண்டில் காசாகிஸ்தான் நாட்டில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஆற்றல் பெற்றவர்களாக உள்ளார்கள்



திருத்தந்தை பிரான்சிஸ் பிற சமயத் தலைவர்கள் பிரதிநிதியுடன்

மேற்கொண்ட திருப்பயணத்தையும் நினைவுகூர்ந்தார்.

மிகச் சிறிய அளவிலேயே கத்தோலிக்கர் களைக் கொண்டுள்ள மங்கோலியா நாட்டின் இளையோர், இவ்வுலகிற்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும் எனவும் கூறிய ஆயர், மங்கோலியா நாடு, அமைதியை எவ்வாறு வளர்ப்பது என்பது குறித்து நமக்குக் கற்றுத்தர முடியும் எனவும் எடுத்துரைத்தார்.

*கிறிஸ்டோபர் பிரான்சிஸ் - வத்திக்கான்*

**திருப்பயணத்திற்கான நன்றியாக மங்கோலிய மக்களின் சார்பாக திருத்தந்தைக்கு வழங்கிய மலர்க்கொத்து, உரோம் நகரில் அன்னை மரியாவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.**

# கிறிஸ்து ஒளி, கிறிஸ்து அரசர் சிற்றாலயம் இளையோருக்கு திருவழிபாட்டு பயிலரங்கம்

கோலாலம்பூர்: மும்மொழி பொறுப்பாளர் களும், இளைஞர் குழு பொறுப்பாளர் களும் இணைந்து ஏற்பாடு செய்த நிகழ்வு, கடந்த 02-09-2023-ல் சனிக்கிழமை காலை மணி 9.30க்கு தொடங்கி பிற்பகல் மணி 1.30 வரையில் (plug in your self) "உங்களை நீங்களே இணைத்துக் கொள்ளுங்கள்" என்ற தலைப்பில் ஒரு பயிற்சி பட்டறை மும்மொழிகளில் அதன் பொறுப்பாளர்களின் தலைமையில் வழிநடத்தப்பட்டது.

மறைக்கல்வி மாணவர்கள் 10-16 வயதுக்கு உற்பட்டவர்களுக்கும், இளைஞர்கள் 17-39 வயதுக்கு உற்பட்டவர்களும் இதில் கலந்து கொண்டு தங்களுக்குள் இருக்கும் பல திறமைகளை வெளிக்கொணர்வதற்கு ஒரு சிறந்த வாய்ப்பாக வழி வகுத்துக் கொடுத்துள்ளார்கள் என்றால் அது மிகையாகாது. இப்பயிற்சியில் ஏறக்குறைய 60 பேர் கலந்து சிறப்பித்துள்ளார்கள்.

இப்பயிற்சியில் திருவழிபாட்டையொட்டி ஐந்து முக்கிய விடயங்கள் நினைவூட்டப் பட்டன

1. வாசகம் மற்றும் மன்றாட்டுக்கள் வாசிப்பு
2. பலிப்பீட அலங்கரிப்பு- (பூக்கள் அலங்கரிப்பு)
3. பாடல் குழுவோடு இணைந்து இசைக்கருவிகள் இசைப்பது.
4. தொலைத் தொடர்புச் சாதனப் பயன்பாடுகள் - (Media)
5. திருப்பீடப் பணியாளர்கள்

இப்பணிகளின் வழியாக தங்களை முழுமை யாக ஈடுபடுத்தி ஆர்வத்தோடு செயல்பட ஒத்துழைப்பு தந்த கிறிஸ்து ஒளி மற்றும் கிறிஸ்து அரசர் சிற்றாலய பெற்றோர் களுக்கு நன்றி நவிலப்பட்டது. பங்கேற்றோர் கடவுளோடு இணைவதற்கும் அவரின் நற்செய்தியைப் பறைச்சாற்றும் கருவிகளாக உருமாற்றிய இறைவனுக்கும் நன்றி கூறப்பட்டது. .

இப்பயிற்சியைப் பங்குத்தந்தை பீட்டர் அந்தோணி அவர்களின் ஆலோசனையின் கீழ் சிறப்பாக ஏற்பாடு செய்த கிறிஸ்து ஒளி மற்றும் கிறிஸ்து அரசர் திருவழிப்பாட்டுக் குழுவினருக்கும், இளைஞர் குழுவினருக்



பயிலரங்கத்தில் கலந்துகொண்டோரில் சிலர்

# காப்பார், புனித யாக்கோபு சிற்றாலயத் ஆண்டு திருவிழா கொண்டாட்டம்

**கிள்ளான்:** சிலாங்கூர், காப்பாரில் அமைந்துள்ள புனித யாகப்பர் சிற்றாலயத்தில் அதன் ஆண்டு திருவிழா கடந்த ஆகஸ்டு 27 -ம் திகதி கொண்டாடப்பட்டது. இந்த சிற்றாலயத்திற்கு சிறு வரலாறு உண்டு.

கிள்ளான் புனித லூர்து அன்னை பங்கின் எல்லைக்குள் இருந்த இந்த காப்பார் வட்டாரத்தில் 1970 ஆண்டுகளில் இல்லங்களில்தான் மாதம் ஒரு முறை திருப்பலி கொண்டாடப்பட்டு வந்தது. பின்னர் கத்தோலிக்க குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரித்த சூழலில், இங்கேயே ஒரு மையம் தொடங்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தின் விளைவாக, அன்று பங்குத்தந்தையாக இருந்த பெனடிக்ட் சவரிமுத்து அவர்கள் மக்களின் ஒத்துழைப்போடு, ஒரு தரை வீட்டை வாங்கினார். தொடர்ந்து இந்த இல்லம் காப்பார் மக்களின் வழிபாட்டு மையமாக மாறியது.

மேலும், இதர நாள்களிலும் இந்த இல்லத்தை நன்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனும் நோக்கத்தில், இதனை



திருப்பலியில் பங்கேற்ற ஒரு பகுதியினர்

‘காப்பார் அன்பு இல்லம்’ எனும் பெயரில் ஆதரவற்ற பிள்ளைகளின் காப்பகமாக மாற்றப்பட்டு, ஆதரவற்ற சிறுவர்கள் தங்கும் அன்பு இடமாக செயல்பட்டது. தொடர்ந்து, அடுத்திருந்த வீடும் விலைக்கு வந்ததால் மாமறைமாவட்டதின் உதவியோடு அடுத்த வீடும் வாங்கப்பட்டு இணைக்கப்பட்டது.

இக்காலக்கட்டதில், மறைந்த அருள்தந்தை லெனர்ட் லெக்சன் மற்றும் அருள்தந்தை யூஜின் பெனடிக்ட் மற்றும் அருள்தந்தை ஜெரால்டு திரவியம் ஆகியோரால், தொடர்ந்து மாதம் தோறும் திருப்பலிகள்



திருப்பலி கொண்டாடும் அருள்தந்தை டேவிட் அருள்நாதன்

கொண்டாடப்பட்டன.

அடுத்து பங்குத்தந்தையாக இருந்த அருள்தந்தை ரெய்மண்ட் பிரேய்ரா அவரகளின் காலத்தில் இந்த அன்பு இல்லம் மூடப்பட்ட வேளையில். திருப்பலிகள் தொடர்ந்தன. அடுத்து அருள்தந்தையர்கள் வி.ஏ. மைக்கல் தெரன்ஸ் தோமஸ் மற்றும்



திருப்பலிக்குப் பின் விருந்துபசரிப்பு

ஜோர்ஜ் பாக்கியசாமி ஆகியோர் இங்கு திருப்பலிகள் கொண்டாடி சமூகத்தை கட்டி எழுப்பினர். அடுத்து வந்த மறைந்த அருள்தந்தை ஜோன் ஞானபிரகாசம் அவர்கள் மேலும் சில அடிப்படை வசதிகளைச் செய்துதவினார்

இக்காலத்தில், இங்கு விவிலிய மற்றும் மறைக்கல்வி வகுப்புகளும் நடைபெறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. நிறைவாக, அருள்தந்தை பீட்டர் அந்தோணி அவர்களின் உதவியோடு இளைஞர்களும் விசுவாச வளர்ச்சியில் சிறப்புற்று விளங்குகிறார்கள் என்றால் மிகையாகாது.

# மணிப்பூரில் பிரிவினவாத மோதல்கள் முடிவுக்கு விண்ணப்பம்

**வத்திக்கான்:** மணிப்பூர் மாநிலத்தில் நான்கு மாதங்களுக்கு மேலாக தொடர்ந்து கொண்டிருக்கும் பிரிவினைவாத மோதல்களை முடிவுக்குக் கொணர இந்திய குடியரசுத் தலைவர் தலையிடவேண்டும் என விண்ணப்பம் ஒன்றை விடுத்துள்ளன வடகிழக்கு இந்தியாவின் கிறிஸ்தவ சபைகள்.

மணிப்பூரின் அண்டை மாநிலமான நாகாலாந்தின் 5 கிறிஸ்தவ சபைகள் இணைந்து குடியரசுத் தலைவர் திரவ்பதி முர்மு அவர்களுக்கு அனுப்பியுள்ள




மணிப்பூரில் அமைதி ஊர்வலம்

விண்ணப்பத்தில், மணிப்பூர் விவகாரத்தில் தலையிட்டு அங்கு அமைதியான தீர்வு காண உதவுவதோடு, இந்த வன்முறைகளால் பாதிக்கப்பட்டுள்ள கிறிஸ்தவ கோவில்கள் மற்றும் கட்டிடங்கள் மீண்டும் கட்டியெழுப்பப்பட ஆதரவு வழங்க வேண்டும் எனவும் கேட்டுள்ளனர்.

இவ்வாண்டு மே மாதம் 3ஆம் தேதி குக்கி பழங்குடி இன கிறிஸ்தவர்களுக்கும் மெய்தெய் இந்து சமுதாயத்திற்கும் இடையே வெடித்த வன்முறைகளால் மெய்தெய் சமுதாயத்தால் 350க்கும் மேற்பட்ட கிறிஸ்தவ கோவில்கள் சேதமாக்கப்பட்டுள்ளன.

குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் மணிப்பூர் நிலை குறித்து தங்கள் ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ள கிறிஸ்தவ சபைகள், மணிப்பூரில் அமைதி, ஒப்புரவு, சமுதாய முன்னேற்றம் என பலதுறைகளில் பாடுபட்டு உழைத்த கிறிஸ்தவ சமூகங்கள் அண்மைக்காலங்களில் தாக்கப்பட்டு வருவது குறித்தும், மணிப்பூரில் இடம்பெறுவது மனித உரிமை மீறல்கள் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குடியரசுத் தலைவரிடம் ஒப்படைக்கும்படி, தங்கள் விண்ணப்பத்தை நாகாலாந்து ஆளுனர் இல. கணேசனிடம் வழங்கியுள்ளன கிறிஸ்தவ சபைகள். இதன் பிரதி ஒன்று மணிப்பூர் முதல்வர் பிரேன் சிங் அவர்களிடமும் வழங்கப்பட்டுள்ளது.

*-கிறிஸ்டோபர் பிரான்சிஸ் – வத்திக்கான்*

## 24 செப்டம்பர் 2023, உலகப் புலம் பெயர்ந்தோர் & அகதிகள் தினம்

### கருப்பொருள்

**‘புலம்பெயர்ந்து வாழப் போகிறீர்களா அல்லது சொந்த நாட்டிலேயே வாழப் போகிறீர்களா? தேர்வு உங்களுடையது’**

*“Free to choose whether to migrate or to stay”*

கத்தோலிக்கத் திருஅவை 1914-ம் ஆண்டு தொடக்கம் ‘ உலகப் புலம்பெயர்ந்தோர் மற்றும் அகதிகள்’ தினத்தை ஆண்டுதோறும் செப்டம்பர் மாதம் இறுதி ஞாயிறுவில் சிறப்பித்து வருகிறது. இவ்வாண்டு அடுத்த வாரம் 24-ம் திகதி இந்நாள் கொண்டாடப்படும்.

கடந்த இரண்டு தசாப்தங்களில், மனிதர்கள் ஓரிடத்தில் இருந்து வேறிடம் சென்று வாழ்வது இதுவரை இல்லாத அளவை எட்டியுள்ளது. 2000இல் 17 கோடியே 30 லட்சம் பேர் தாய் நாட்டிற்கு வெளியே வாழ்ந்தததாகவும், 2020-ல் அந்த எண்ணிக்கை 28 கோடியே 10 லட்சமாக அதிகரித்துள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் சபை கூறுகிறது.

# பொறுத்தருள்வோம் பிறர் குற்றம்!

நாம் இன்று ஆண்டின் 24-ஆம் ஞாயிறுவில் இணைகிறோம். மன்னிப்பும் இரக்கமும் மனிதனின் இரு கண்களாக இருக்க வேண்டும் என்பதை உணர்ந்து வாழ்வில் செயல்படுத்த இன்றைய திருப்பலி நம்மை அழைக்கிறது. இன்றைய முதல் வாசகத்தில், ‘சினங்கொள்ளாதே, குற்றங்களைப் பொருட்படுத்தாதே’ என்று நற்குணங்களை எடுத்துரைக்கிறது சீராக்கின் ஞான ஆகமம். வெகுளி, சினம் இவை பாவிகளின் குணங்கள் என்கிறது. இரண்டாம் வாசகத்தில் நாம், வாழ்ந்தாலும் இறந்தாலும் நாம் ஆண்டவருக்கே உரியவர்களாய் இருக்கிறோம் என்பதை நினைவூட்டுகிறார் புனித பவுல்.

விவிலியத்தில் ஏழு என்ற எண் நிறைவை அல்லது முழுமையைக் குறிக்கும். எனவேதான் பேதுரு இயேசுவிடம் “ஆண்டவரே எனக்கெதிராய் பாவம் செய்யும் ஒருவரை ஏழு முறை மன்னித்தால் போதுமா” என்கிறார். காரணம் ஏழு முறை மன்னித்தால் ஒருவரை முழுமையாக மன்னித்து விட்டதாக பேதுரு எண்ணியிருந்தார். இயேசு அவரிடம் எழுபது தடவை ஏழு முறை என அளவு கடந்த, நிபந்தனையற்ற, எண்ணற்ற மன்னிப்பைப் பதிலாகத் தருகிறார்.

பழிவாங்குவது பலசாலித்தனத்தின் அடையாளம் எனக் கருதப்படுகிறது. இக்காரணத்தினால் தான் மனிதர்களுக்கிடையேயான மோதல்கள் வலுப்பெருகின்றன. கொஞ்சம் ஆழமாகச் சிந்திக்கும் போது பிறர் நம்மைக் காயப்படுத்துவதற்கும், நாம் அதற்குப் பதிலாக அவரைப் பழிவாங்குவதற்மிடையேயான காலத்தில் ஏராளமான மாற்றங்கள் நம்மில் நடக்கின்றன. “பிறர் நம்மைக் காயப்படுத்தி விட்டார்களே“ என்ற எண்ணம் நம்மைப்பற்றியும், பிறரைப்பற்றியுமான கசப்புணர்வுக்கு இட்டுச்செல்கிறது.

இனிமையானவற்றிலும் ஈடுபாடு கொள்ள விடாமல் தடுக்கிறது. தேவையற்ற விதத்தில் எரிச்சலும், கோபமும் வந்து நம்மை ஆட்டிப்படைக்கின்றன, உடலில் தேவையற்ற அளவில் அமிலங்கள் சுரப்பதால் குடல் புண், இரத்த அழுத்தம், நீரழிவு போன்ற வியாதிகள் நம்மில் நிரந்தரமாக குடியேற ஆரம்பிக்கின்றன.

எந்த அளவுக்கு நாம் பிறரை மன்னிக்கிறோமோ அந்த அளவுக்கு நாமும் இறைவனிடம் மன்னிப்புப் பெறுகின்றோம். மன்னிப்பதனால் மனமானது இறுக்கத்திலிருந்து விடுதலை பெறுகிறது. இல்லாவிட்டால் நம்மைத் தீய வழிக்கு அழைத்து சென்று விடும். மன்னிப்பதனால் இரண்டு பேருக்கும் நன்மை கிடைக்கிறது. மன்னிப்பவர் இறுக்கத்திலிருந்து விடுதலைப் பெறுகிறார். மன்னிக்கப்படுபவர் மனம்மாறி நற்காரியம் செய்கிறார்.

ஆண்டவரின் அன்பையும் அளவு கடந்த மன்னிப்பையும் அனுபவித்த நாம் பிறரோடு பகிர்ந்து கொள்ள வேண்டும். பிறர் அன்பில்லாத பணியாளர்களைத்தான் இயேசு சாடுகிறார். ஒரு கவிஞன் பாடிய பாடல் வரிகள் “மன்னிக்கத்தெரிந்த மனிதனின் உள்ளம் மாணிக்கக் கோவிலடா” என்ற அற்புதமான வரிகள் நம் உள்ளத்தைத் தொட வேண்டும்.

மன்னிப்பது அன்பின் உயரிய வெளிப்பாடு நம் உள்ளத்தில் உண்மையான அன்பு இருந்தால் மட்டுமே நாம் பிறரை மன்னிக்க முன்வருவோம். சிலுவையில் தொங்கிய வேளையிலும் அவர் “தந்தையே இவர்களை மன்னியும்” என்று மன்றாடியது போல, நாமும் உளமார மன்னிப்போம். அடுத்தவர் அநீதியை மன்னிக்கும் போது உன் பாவங்கள் மன்னிக்கப்படும்’ (சீ.ஞா 28:2). மன்னிப்போம் மன்னிப்படைவோம், உறவு வாழ்வுக்கு உயிர் கொடுப்போம்.

*-சவரிநாதன், சுங்கை பட்டாணி, கெடா*

**ஆண்டின் பொதுக்காலம் 24ம்- ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | சீராக் 27: 30-28-7 |
| தி.பாடல் | 103: 1-2. 3-4. 9-10. 11-12 |
| 2-ம் வாசகம் | உரோ 14: 7-9 |
| நற்செய்தி | மத்தேயு 18: 21-35 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 1**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை- வாரம் 3**